Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 01 | 17-09-94 | சனிக்கிழமை | ஓசை 211

## பாவனைக்கு உதவாத அளவைகள் யாழ். மாவட்டத்தில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினால் பல பகுதிகளில் நிறுத்தல் அளவைகள் பரிசோதனை செய்யப்பட்டபோது பல நிறுத்தல் அளவைகள் பாவனைக்கு ஏற்றவை அல்ல என நிராகரிக்கப்பட்டன. சில நிறுத்தல் அளவைகள் சிறு சிறு திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களப் பகுதியினரால் இப் பரிசோதனை பரவலாக யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம் பெற்று வருகிறது. (6ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு மாத இறுதிக்குள் வெளிவரலாம்

## அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்த ஜனாதிபதி செயலகம் தயாராகி வருவதாகவும், இது குறித்த அறிவித்தல் இம் மாத இறுதிக்குள் வெளிவரலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது குறித்த அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளிவரலாம் எனவும் இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருவதோடு தேர்தல் ஆணையாளருக்கு இத்தேர்தல் குறித்து எந்நேரமும் தயாராக இருக்குபடி ஜனாதிபதி செயலகத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஐ-தே-கவில் ஏற்பட்டுள்ள உட்பூசல், ஊழல் அதிகாரத் துஷ்பிரயோகம் என்பவை தொடர்பாக நடைபெறும் விசாரணைகளுக்கு முன்னர் தேர்தலை நடத்துவதன் மூலம் ஓரளவு வாக்குகளையாவது கட்சிக்காக பாதுகா (6ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலின் பின்பே பேச்சுவார்த்தையில் முக்கிய கட்டம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான பேச்சுவார்த்தையின் முக்கிய கட்டம் ஜனாதிபதி தேர்தலிற்கு பிற் [illegible]

இலங்கை இனப்பிரச்சினையில் சமாதான தீர்வை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் புதிய அரசு தற்பொழுது உள்ள தமது பாராளுமன்றப் பலத்தைப் பொறுத்து குறிப் [illegible]

தலை முடித்து அதிலும் தமது பலத்தை நிரூபித்ததன் பிற்பாடே தொடர்ந்து சமாதான நகர்வை மேற்கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## பற்றறி மீதான தடை தளர்த்தப்பட்டது

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

வட பகுதிக்கு பற்றறிகளை கொண்டு செல்ல இருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் வைத்து இதனை அவர் தெரிவித்தார் ஆனால் சிறிய பென்டோர்ச் பற்றறிகளை வடபகுதிக்குள் கொண்டு செல்ல இருந்த தடை தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மேலும் பல பொருட்களுக்கான

## தடை நீக்கப்பற்றி ஆராய விரைவில் மாநாடு

மேலும் பல பொருட்களிற்கான தடை நீக்கம் பற்றி ஆராய்வதற்கான மாநாடு ஒன்று கொழும்பில் விரைவில் கூட்டப்படவுள்ளது

சமாதான முஸ்தீபைத் தொடர்ந்து வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருட்களில் பலவற்றை அண்மையில் வடபகுதிக்குள் கொண்டு செல்ல புதிய அரசினால் அனுமதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இது மேலும் பல பொருட்களிற்கான தடையை நீக்கும் முகமாக கொழும்பில் விரைவில் மாநாடு ஒன்று கூட்டப்படவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன, (88) [நி]

## கூட்டுறவு சங்கங்களில் சீனி தாராள விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு தாராளமாக சீனி விநியோகிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக யாழ், குடாநாட்டில் இருந்த சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினால் கொழும்பில் இருந்து கூடுதலான அளவு சீனி தருவிக்கப்பட்டு தற்போது ப.நோ.கூ. சங்கங்களினூடாக தாராளமாக கட்டுப்பாடு ( 6 ஆம் பக்கம் பார்க்க)

## 20 எழுதுவினைஞர்கள் யாழ்.வங்கிகளுக்குநியமனம்

## இராணுவத்தின் சூட்டிற்கு மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கடற் பரப்பில் கரைவலை வீசிக் கொண்டிருந்த மீனவர்கள் மீது காவலரணில் இருந்துஇராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்கான மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது. கடற்கரை பகுதியில் வீச்சுவலை வீசி மீன் பிடித்துக்கொண்டிருந்த போதே இத் துப்பாக்கி பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது. தம்பையா செல்வராசா (வயது 38) என்பவரே காற் (6ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை தாக்குதலால் வள்ளங்கள் சேதம்

பருத்தித்துறை சுற்கோவளம் கடற்பகுதியில் மீனவர்கள் மீது கடற்படையினர் கண்மூடித்தனமான முறையில் தாக்கியதில் மீனவர்களது வள்ளங்கள் சில சேதமடைந்தன.

நேற்று முன்தினம் அதிகாலை 3 00 மணியளவில் இக்கடற்பரப்பின் மீது ரோந்துக் கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை இலக்கு வைதது பீரங்கி, கலிபர் தாக்குதலை மேற்கொண்ட போதே இச்சேதம் ஏற்பட்டது.

கடற்படையினரின் இத்தாக்குதலினால் மீனவர்கள் தமது மீன்பிடி பொருள்களை கடலில் கைவிட்ட நிலையில் நீந்திக் கரை வந்து சேர்ந்தனர். (யோ)

## சுப்பர் டோறா தகர்ப்பு

த்தையின் முக்கிய கட்டம் ஜனாதிபதி தேர்தலிற்கு பிற்பாடே நடத்தப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கும் புதிய அரசு தற்பொழுது உள்ள தமது பாராளுமன்றப் பலத்தைப் பொறுத்து குறிப்பிட்ட எல்லைவரையுமே நகரமுடியும்.

பின்பு ஜனாதிபதித் தேர்தான நகர்வை மேற்கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான வண்டியை நகர்த்த தேவையான எரிபொருள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வங்கிகளுக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் வங்கியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக இருபது பேரை நியமனம் செய்யும்படி கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களில் இந்த நியமனம் இடம்பெறும் என கூறப்படுகிறது.

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் யாழ். அர

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி தபால் சீராக்கம் செவ்வாய் ஆராயப்படும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள உதவி அஞ்சல் நாயகங்களுக்கான கூட்டத்தில் வடபகுதி தபால் சேவையின் சீராக்கம் பற்றி ஆராயப்படும் என அஞ்சல் திணைக்கள சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் (வடமாகாணம்) ச. சடாட்சரநாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை பதவி ஏற்றுள்ளதை அடுத்து இக் கூட்டம் நடைபெறுகிறது

(6ஆம் பக்கம் பார்க்க)

## 55வயது நிறைவெய்திய ஊழியர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் 55 வயதை நிறைவெய்தும் அரசாங்க ஊழியர்களின் விபரங்களை திரட்டி அனுப்பி வைக்கும்படி புதிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்கக் காரியாலயங்கள் திணைக்களங்கள் பலவற்றிற்கு இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் முகாம்கள் ஒருபோதும் மூடப்படமாட்டாது

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உறுதிமொழி

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெற்ற பின்பும் வடக்கு கிழக்குப் பகுதியில் தற்போதுள்ள இராணுவ முகாம்கள் எக்காரணம் கொண்டும் அகற்றப்படமாட்டாது என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இராணுவத்தினரைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இராணுவத்தினரின் சொந்த அபிப்பிராயங்களையும் அப்போது அவர் கேட்டறிந்தார். அவர் மேலும் கூறுகையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றும் அரச தரப்பு பிரதிநிதிகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அவ்வேளை சமாதானப் பேச்சுக்களின் போது, புலிகள் ஆயுதங்களை சேகரித்து தாக்குதல் நடத்துவார்களா என இராணுவச் சிப்பாய் ஒருவர் கேட்டபோது, முன்னர் அவ்வாறான சம்பவங்கள் நடந்திருந்தாலும், தற்போது அதற்கு இடமளிக்கமாட்டோம். நாங்கள் காட்டிக் கொடுப்பவர்கள் அல்லர் என்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் முகாமிற்கு அமைச்சர் விஜயம்

### யாழ். பயணிகளையும் சந்திப்பு

வவுனியா இராணுவ நிலைகளுக்கு விஜயம் செய்த பிரதி பாதுகாப்பு அமைச்சர், தாண்டிக்குளம் தடைமுகாமினூடு பிரயாணம் செய்துவரும் மக்களையும் நேற்று முன்தினம் சந்தித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து, வவுனியாவுக்கு வர இரண்டு மூன்று தினங்களுக்கு மேல் செல்வதாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மக்கள் அமைச்சரிடம் கூறியதாக ரூபவாஹினி தெரிவித்தது.

## 400 தபால் பொதிகள்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று நண்பகல் வந்த மாகோ, கப்பலில் யாழ் தபால் திணைக்களத்திற்கு 400 தபால்பொதிகள் எடுத்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

சுப்பர் டோறா தகர்ப்பு

## காணாமற்போனபடையினர் விபரம் பற்றி அறியவும்

### பெற்றோர் பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

பருத்தித்துறை கடற் பரப்பில் தகர்க்கப்பட்ட கடற்படைப் படகில் பயணம் செய்த 12 கடற் படையினர் பற்றிய விபரத்தை விடுதலைப் புலிகளிடம் கோரும்படி அவர்களது பெற்றோர்கள் சிறிலங்கா பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். சுப்பர் டோறா 464 எனப் பெயர் கொண்ட இப் படகு கடந்த வருடம் ஆகஸ்ட் 29-ம் திகதியன்று பருத்தித்துறை கடற் பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

[6ஆம் பக்கம் பார்க்க]

## கனடாவிற்கான குடிவரவு 50ஆயிரத்தால் குறையும்

(ரொரான்ரோ)

கனடாவிற்கான குடிவரவு அடுத்த ஆண்டு 50 ஆயிரத்தினால் குறைக்கப்படல் வேண்டும் என அரசாங்க ஆவணம் ஒன்று தெரிவித்திருப்பதாக ''ரொரன்ரோஸ்ரார்'' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்களின் மனோபாவத்திற்கேற்ப கனடாவிற்கு குடிபெயர்வோரின் எண்ணிக்கை அடுத்த ஆண்டு சுமார் 2 லட்சமாக மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்று இந்த ஆவணம் கூறுகின்றது.

கனேடிய குடிவரவு அமைச்சரே இந்த ஆவணத்தை வகுத்துள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

## 6 செய்தியாளர் யாழ்.வருகை

(வடமராட்சி)

வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த ஆறு செய்தியாளர்கள் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

இந்திய செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு செய்தியாளர்களும் ஏ. எவ். பி.

[6ஆம் பக்கம் பார்க்க]

# தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகளில் பெருமளவு மாணவர், மக்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். குடாநாடெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி கோட்டங்களில் உண்ணாவிரத அனுஷ் [illegible]ளில் பெருமளவில் மாணவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

வீதிகள், அரச - தனியார் காரியாலயங்கள் மற்றும் திணைக்களங்கள் தோறும் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் படம் வைத்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

திலீபனின் நினைவு நாள் அனுஷ்டிக்கப்படும் பகுதிகளில் அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றனர்.

பல இடங்களில் திலீபனின் தியாகத்தை விளக்கும் விடுதலைப் பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. பொதுக் கூட்டம் நடைபெறும் இடங்களில் திலீபனின்

( 6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாட்டில் மின்கம்பங்கள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சேதமடைந்துள்ள மின்சார கம்பங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களையும் திருத்தும் வேலைகளில் மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளதாக அது தொடர்பான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

குடாநாட்டுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசாங்கம் விடுத்த அறிவித்தலைத் தொடர்ந்தே மின்சாரசபையினர் இந்த திருத்த வேலைகளில் ஈடுபட்டு வருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சுன்னாகம் மின் நிலையத்திற்குமேலும் ஐந்து மெகாவாற்றுகொண்ட ஐந்து மின் பிறப்பாக்கிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் பொலிஸ் பலி

(கொழும்பு)

சியம்பிலான்வெ மூன்றாம் மைல் கல் பகுதிக்கு அருகே ஜீப் வண்டியொன்று தடம் புரண்டதால் பொலிசார் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார், இந்த ஜீப்பில் பயணம் செய்த மேலும்மூன்று பொலிசார் படுகாயமுற்ற நிலையில் சியம்பிலான்வெ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

**''கற்பூரவல்லி இலை''**

மருத்துவர் தேவைக்கான கற்பூரவல்லி இலைகள் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'' (சி-10354)

**வெளியாகியுள்ளது**

அ. பொ. செல்லையா எழுதிய கல்வி பற்றிச் சிந்திப்போம் - செயற்படுவோம் எனும் நூல் வெளியாகியுள்ளது. இது அதிபர்களுக்கு ஓர் அகல்விளக்கு: பெற்றோர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கு கல்வித் துறையினருக்கு ஒரு கையேடு: விலை 25/- (9405)

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து. உடன் கண்ணாடி வழங்கப்படும் இல, 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (9398)

**ஆண்டு 3, 5**

ஆண்டு 5ற்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அநுமதிப் பரீட்சை வினாத்தாளும் ஆண்டு 3இற்கான புலமைப் பரிசில் (1996) மாதிரி வினாத்தாளும் 18-09-94 ஞாயிறு வெளியிடப்படும், மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன: புதிய கல்வி நிலையம் 209 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9432)

**தவறிவிட்டது**

16 - 09 - 1994 அன்று கேணல் கிட்டு பூங்காவிற்குள்ளும் அதன் சுற்றுப்புறத்திலும் பாவிக்கப்பட்ட கொனிக்கா புகைப்படச் சுருள் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [9438]

**6-வது ஆண்டு நிறைவுவிழா**

விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழா ...

# கூட்டத்திற்கு தலைவரை பொலிசார் கூட்டி வந்தனர்

(கொழும்பு)

நிந்தவூர் பிரதேசசபையின் மாதாந்த கூட்டம் சடந்த புதன்கிழமையன்று மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் இடம்பெற்றது. பிரதேச சபையின் ஒன்பது உறுப்பினர்களில் ஆறுபேர் மட்டுமே சபைக் கூட்டத்திற்கு சமுகம் அளித்து இருந்தனர். இவர்களில் நால்வர் ஐ.தே.க வினர் என்பதும், இருவர் தமிழ் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது, முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த இரு உறுப்பினர்களும், சுயேட்சைக்குழு உறுப்பினர்களில் ஒருவரும் கூட்டத்திற்கு சமுகம் அளிக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக தேடப்பட்டு பின் பொலிசாரிடம் சரணடைந்த பிரதேச சபைத்தலைவர் எம்.ஐ அகமது, உபதலைவர் அக்தார், மற்றும் உறுப்பினர் ராசிக் ஆகிய மூவரும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

கல்முனை நீதிமன்றத்தின் பணிப்புரையின் படியே இவர்கள் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். பிரதேச சபையின் கூட்டம் சபா மண்டபத்தில் இடம்பெற்றபோது தலைவர் எம். ஐ. அகமது இக்கொலைக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும், தாம் நிரபராதி எனவும் தெரிவித்தார். கூட்டம் முடிவுற்றதைத் தொடர்ந்து ஆதரவாளர்களின் ஆரவாரத்திற்கு மத்தியில் அவர் மீண்டும் பொலிஸ் தடுப்பு முகாமிற்கு கூட்டிச் செல்லப்பட்டார்.

## சைவப் பிரகாச பாடசாலை இடம்மாறும்

(யாழ்ப்பாணம்)

யாழ் அருச்சுனா வீதியில், தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இயங்கிவரும் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் விரைவில் தனக்கென ஒரு தனியிடத்தில் இயங்கவுள்ளது. இதற்கென தற்போது இயங்கும் கல்வி நிலையத்திற்கு அருகே தனியாரின் காணியொன்று பெறப்பட்டுள்ளது. இக்காணியில் உள்ள குண்டு வீச்சினால் சேதமடைந்த கட்டிடம் ஒன்று கல்வித் திணைக்களத்தினல் வழங்கப்பட்ட கல்நார்த்தகடுகளினால் கூரையிடப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதில் தற்போது ஆரம்பநிலை வகுப்புகள் சில இயங்குவதாகவும் காணியின் மற்றைய பகுதியில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு ஏனைய வகுப்புகளும் அங்கு சென்றுவிடும் என்றும் மேற்படி வித்தியாலய அதிபர் திரு பொ. அருணகிரிநாதன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (22)

# தொழில் நுட்ப சான்றிதழ்; டிசெம்பரில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சை ஆண்டு 9, 10 மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும்என கல்வித்திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது

மேற்படி சான்றிதழுக்கான பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்போது பாடசாலை ரீதியாக கோரப்பட்டுள்ளன. கடந்த வருடம் ஆண்டு 9 மாணவர்களுக்கு மேற்படிபரீட்சை இங்கு நடைபெறாததால் இம்முறை ஆண்டு 10இல் ஒரே பரீட்சையாகவே நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடம் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் கடந்த வருடம் விண்ணப்பிக்கத் தவறியோர் இம்முறை ஆண்டு 9 உடன் புதிதாக விண்ணப்பிப்பதன் மூலம் இம்முறை நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்ற முடியும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (88, ச, தி)

# கொள்ளையர் தாக்குதலில் ஒரேகுடும்பத்தில்4பேர்காயம்

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் புகுந்த கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர் நேற்று முன்தினம் மானிப்பாய் வீதி ஆறுகால்மடம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: இப்பகுதியில் மருத்துவ நிலையம் ஒன்றை நடாத்திவரும் புங்குடுதீவைச் சேர்ந்த டாக்டர் ஆ- பேரின்பநாதன் என்பவருடைய வீட்டில் நள்ளிரவில் புகுந்த கொள்ளையர் ஐவர், கத்தியினால் இவரைப் பலமுறை குத்திக் காயப்படுத்திய பின் இவரது மனைவியின் கழுத்தில் கிடந்த தாலிக்கொடியை அறுக்க முயற்சித்த போது ஏற்பட்ட இழுபறியினால் மனைவியான நவமணி என்பவரும் காயம் அடைந்தார். ஆயினும் அவர் தாலிக்கொடியை விடவில்லை கையில் அகப்பட்ட 5 பவுண் சங்கிலி ஒன்றை அறுத்துக்கொண்ட கொள்ளையர் இவர்களது பிள்ளைகளான சிவப்பிரியா (வயது-19) அரிசரன் (வயது-17) என்பவர்களையும் தாக்கி விட்டு ஓடி விட்டனர். இதனால் இவ்விருவரும் தலையிலும் கையிலும் காயமடைந்துள்ளனர். நான்கைந்து முறை முதுகில் கத்தியால் குத்தப்பட்டு படுகாயம் அடைந்த பேரின்பநாதன் தற்போது ஆபத்தான நிலையில் யாழ்- போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப கொள்ளையர்கள் ஓடிய போது மூன்று கத்திகள், ஒரு சோடி செருப்பு ஒரு தொப்பி, டோர்ச் லைற் ஆகிய பொருட்களை கைவிட்டுச் சென்றுள்ளனர். இவற்றில் ஒரு கத்தி, முனையில் இரத்தக்கறை படிந்த நிலையில் இவ் வீட்டு வளவில் கிடக்கக் காணப்பட்டது. ஏனைய பொருட்கள் வைத்திய அதிகாரிகளினூடாக தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வீட்டினர் தரப்பில் கூறப்பட்டது. (22)

## செப்ரிசீமியாவினால் குழந்தை உயிரிழப்பு

செப்ரிசீமியாவினால் பீடிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தையொன்று உயிரிழந்தது கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியிருந்த திவகத்தைச் சேர்ந்த பா. ஜஸ்டின் என்ற ஒரு வயது ஆண் குழந்தையே சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்ததாகும். (22)

## பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவிற்கான பயிற்சி நெறி 19-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக மேற்படி கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [22]

## முக்கிய அறிவித்தல்

**விசேட பொதுக் கூட்டம்**

**வலி - கிழக்கு வர்த்தகர் சங்கம்**

**(கோப்பாய் வட்டம்)**

இன்று (17 - 09 - 1994)சனிக்கிழமை பி. ப3 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் வட்டப்பிரிவுக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்கும், உறுப்புரிமை பெறாத புதிய வர்த்தகர்களுக்குமான ஓர் விசேட பொதுக்கூட்டம் பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிப்பதற்காக நடைபெறவுள்ளது. அனைத்து வர்த்தகர்களும்தங்கள் குடும்ப அட்டை, வருவாய்த்துறை பதிவு சான்றிதழ் என்பவற்றுடன் தவறாது வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தா. சிவானந்தன் — தலைவர்

ரீ. எஸ். சண்முகரத்தின சர்மா — செயலாளர்

(9424)

## நினைவு கூருகின்றோம்...

**17-09-1994**

1985-ம் ஆண்டு இதேதினத்தில் எமைப் பிரிந்த,

**பீற்றர்** (சுப்பையா குமாரவேலு-குமாரவேலு வீதி, அரியாலை-யாழ்)

1990 ம் ஆண்டு மட்டு-குரங்குபாஞ்சான் பகுதியில் எமது முகாம் ஒன்றை சிறிலங்கா ராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்டசமரில் வீரச்சாவெய்திய,

**அலி** (மகாலிங்கம் கரன்-முள்ளிப்பொத்தானை-மட்டு)

கடவாணையில் பொறிவெடியில் சிக்கியநிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் திலகன் - அண்ணாச்சி** (வீ. இராமச்சந்திரன்-ருஞ்சுப்பந்திடல், தம்பலகமம்-திருமலை)

கடவானையில் எமது முகாமை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தாக்கியபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**தீபன் - திலீபன்** (சண்முகவடிவேல் செல்வநாயகம் -தம்பலகமம்-திருமலை)

யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய,

**லெப். ரேகா - பட்டு** (சுசிலா சங்கரப்பிள்ளை-மானாவளை, மட்டுவில் கிழக்கு-சாவகச்சேரி)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**குகநேசன்** (ஆறுமுகம் ராசன்-சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**2 ம் லெப். மில்ராஜ்** (வைரமுத்து விஜேந்திரன்-கிளிவெட்டி, மூதூர்-திருமலை)

**அறிவழகன்** (சுப்பிரமணியம் வேலாயுதம்-52, கிளிநொச்சி கிழக்கு)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவின் 2-வது தளபதியுமான,

**லெப். கேணல் ஜஸ்ரின்** (பொன்னுச்சாமி பாஸ்கரன்-தையிட்டி, காங்கேசன்துறை-யாழ்)

**லோறன்ஸ்**(முருகேசபிள்ளை தயேந்திரன்-சுன்னாகம் வீதி, சிந்துசெட்டி, புத்தூர்மேற்கு-யாழ்)

**சுரேன்** (சந்திரசேகர் சுரேஸ்குமார்-ஐயனார்கோவிலடி-சுன்னாகம்-யாழ்)

1992-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த,

**மகேஸ்வரி** (ரஜனி முத்துக்குமார்-பொன்னம்பலம் வீதி, அரியாலை-யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10350)

3-ம் ஆண்டு ... 55-ம் நாள் நினைவஞ்சலியும்

வது ஆண்டு நிறைவு விழா நாளை காலை ஒன்பது மணியளவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இதில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் கலந்து கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பட்டப்பகலில் வீட்டில் திருட்டு

(தென்மராட்சி)

வீட்டில் வைக்கப்பட்டிருந்த பணம், நகை என்பன பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளன.

கொடிகாமம் கச்சாய் வீதியில் சந்தையா சமலம் என்பவரது. வீட்டில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சந்தைக்கு பொருட்கள் வாங்குவதற்காக இவர்கள் சென்றிருந்த சமயம் வீட்டினுள் புகுந்த இனந்தெரியாதோர் பணமாக வைக்கப்பட்டிருந்த ரூபா 15, 000 ஐயும், 5000 ரூபா பெறுமதியான நகைகளையும் திருடிச்சென்றுள்ளனர். இது தொடர்பாக காவல் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றர்.

(86)

## நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)


அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த ஏழு தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஊழியர்கள் 92ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து அஞ்சல் திணைக்களத்தில் தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றி வந்தனர்

இவர்கள் அஞ்சல் திணைக்களத்தின் நிர்வாகக் காரியாலயத்திலும், கணக்காளர் பகுதியிலும் ணிபுரிகின்றனர்.

ப (தி. 88)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சல்



லெப். கேணல் ஜஸ்ரின்

(பொன்னுச்சாமி பாஸ்கரன்)

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைத்தளபதி 3-வது பொறுப்பாளர்)

பிறப்பு: 03 - 04 - 1962

வீரச்சாவு: 17 - 09 - 1991

## 55-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பொன்னுச்சாமி ஜெயபாஸ்கரன்

பிறப்பு: 5 - 01 - 1964

இறப்பு: 26 - 07 - 1994

18 - 9 - 94 -ம் திகதி நாளை ஞாயிறு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி கிரியையில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

மஞ்சத்தடி ஒழுங்கை,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(9427)

## ஓராண்டு சென்றாலும் நீங்காத நினைவலைகள்

மொட்டாக மலர்ந்து
27-12-1972

பூவாக உதிர்ந்து
17-09-1993



செல்வன் முருகேசு பகீரதன்

[ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன்]

திதி- 06-10-1994

உன்னை நினைக்கையிலே உலகம் சிறிதாச்சு!
உருகின்ற எங்கள் ஏனை உணர்வெலாம் அற்பமாச்சு!
தவிக்கின்ற நெஞ்சில் நீ தருங்காட்சி தீயாச்சு!
வடிக்கின்ற கண்ணீரில் நீ வருங்காட்சி வரமாச்சு! நாம்
துடிக்கின்ற காட்சியை நீ தூர நின்றேன் பார்ப்பதாச்சு!
பார்க்கின்ற பொருட்களிலும் பாரிலுள்ள மாந்தரிலும்
- நீ நின்று
சிரிக்கின்றது போன்ற செயலெம்மை உருக்குதடா!
நெருப்பாய் உயிர்க்கின்றோம் நேரில் பார்த்து வருட
- மாச்சு!

தம்பசிட்டி,
பருத்தித்துறை.]

அப்பா, அம்மா
அண்ணா, தங்கை

(9340)

யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

வீடமைப்பு அதிகாரசபை

## வட மாகாண அலுவலகம் அடுத்த மாதம் மூடப்படும்

வவுனியாவில் இயங்கிவந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வடக்கு மாகாண அலுவலகம் அடுத்த மாதம் முதலாம் திகதி செயலிழக்குமென தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி செயற்பாடுகளை கவனிப்பதற்காக வவுனியா நகரசபை கட்டடத்தில் இயங்கி வந்த மேற்படி அலுவலகம் மூடப்பட இருக்கும் அறிவித்தல் வடமாகாணத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்களுக்கும் மாகாண முகாமையாளர் திரு. வே. ஸ்ரீஸ்கந்தவேல் கையெழுத்திட்ட கடிதமூலமாக அறிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரின் அறிவுறுத்தல் கடிதத்திற்கு அமைவாக எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமையுடன் மேற்படி மாகாண அலுவலகம் செயல் இழக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

## 30,000 குவைத் டினாருடன் சிறிலங்கா பிரஜை மறைவு

(கொழும்பு)

நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்டிருந்த 30,000 குவைத்தியடினார்கள் பணத்துடன் சிறிலங்கா வாசி ஒருவர் குவைத்திலிருந்து தலைமறைவாகியுள்ளார்.

சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போல் இது தொடர்பாக சிறிலங்கா பொலிசாரின் உதவியை நாடியுள்ளது. கோட்டே பகுதியை சேர்ந்த இவர் சிறிலங்கா பொலிசாராலும் தேடப்பட்டவர் என்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. குவைத்தில் சாரதியாக பணிபுரிந்த ஜெயவர்த்தனா என்பவரே அவரது வேலை கொள்வோர் வழங்கியிருந்த பணத்துடன் தலைமறைவானவராவார்.

இதேவேளை துபாய்பிரஜை ஒருவரின் கண்களில் மிளகாய் தூளை தூவிவிட்டு 90குவைத் டினார்களை கொள்ளையிட்ட மற்றுமொரு சிறிலங்கா பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரை இறங்கியபோது சிறிலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மாகாண கல்வி அமைச்சில் பதவி நிலை மாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் சில முக்கிய பதவிநிலை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

புதிய அரசினால் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நீண்ட காலமாக நடைபெற்று வந்த சில மோசடிகள் சம்பந்தமாகவே இப்பதவிநிலை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளில் நிதிமோசடியே பெரிதும் பாரதூரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகின்றது.

எனினும் இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

(பா)

## வட்டவை ரீதியில் செய்முறை விளக்கம்

யாழ் மாவட்டத்தில் தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்யும்முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தென்னைச் செய்கை பற்றிய செய்முறை விளக்கத்தினை வட்டரீதியாக நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் நடாத்தப்படவிருக்கும் இப்பயிற்சிகள் [illegible] காலை 9-00 மணிக்கும், 30 ஆம் திகதி சங்கானை வட்டத்தில் சுளியடி மாணிக்க வாசகம் வீட்டில் காலை9-00மணிக்கும் நடாத்த ஏற்பாடாகியுள்ளன.

இப் பயிற்சி வகுப்புகளில் அனைத்து விவசாயிகளையும் உற்பத்திக் குழுக்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் [illegible]

## நாகதம்பிரான் ஆலய வரலாறு வெளியீடு

(பருத்தித்துறை)

சரித்திரப்பிரசித்தி பெற்ற நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டுவிழா ஆலய முன்றலில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு மு. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு.செ. கிருஷ்ணராசா நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையை நிகழ்த்தினார். பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கானர. செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தினர். நூலாசிரியர் திரு வி. கனகராசா பதிலுரை நிகழ்த்தினார். (25)

## ஓடுபிரித்து இறங்கி கடையில் திருட்டு

(தென்மராட்சி)

கடையில் ஓடு பிரித்து இறங்கி பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் இராசு இராசலிங்கம் என்பவரது பலசரக்கு கடையிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. கடந்த திங்கட்கிழமையன்று கடை பூட்டப்பட்டு இருந்த வேளையில் இத் திருட்டு இடம்பெற்றுள்ளது சுமார் எட்டாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன இவற்றில் ஒரு பகுதி பின்னர் அயலில் உள்ள காணி ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இத் திருட்டுச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி காவல் நிலையத்தினர் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். (86)

## வேலிச்சண்டை கத்திவெட்டில் முடிவு

(தென்மராட்சி)

அயலவர்களின் வேலிச்சண்டையால் ஒருவரின் தலை கத்தி வெட்டுக்கு இலக்கானது

வேம்பிராய் மீசாலை வடக்கு பகுதியில் வேலி எல்லைச் சண்டையொன்று இருவருக்கிடையில் வாய்த் தர்க்கத்தில் ஆரம்பமாகியது.

இறுதியில் இருவரும் பொல்லுகள், கத்திகள் சகிதம் சண்டையிடும் அளவிற்கு பெருத்தது. இதில் ஒருவர் காயமடைந்தார். 52 வயதான [illegible]

## அனுமதியின்றி விறகு வெட்டியவருக்கு அபராதம்

அனுமதியின்றி விறகு வெட்டியமைக்காக குற்றப்பணம் செலுத்தும்படி தீர்ப்பு வழங்கப்பட்டதுடன் விறகும் பறிமுதல் செய்யப்பட்டது பளை சோரன்பற்று பகுதியில் அனுமதியின்றி 4500 ரூபா பெறுமதியான விறகுகளை வெட்டியமைக்காக 7000 ரூபாவை குற்றப்பணமாகக் கட்டும்படி நீதியாளர் தீர்ப்பு வழங்கினார். இப்பணத்தைக் கட்டத்தவறின் 200 நாட்கள் கட்டாய சமூக சேவை எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. (86)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 1994-10-14ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி : சுகாதார சேவைகள் தொழிலாளி (தாழ் தரம்)

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 2455- 8×40-2775/- மாதமொன்றுக்கு. (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படியுட்பட, ஏனைய படிகளுடன், 1994 12 31 வரை அடிப்படைச் சம்பளத்தின் 25%ம் வழங்கப்படும்)

தகைமைகள்: 1. மலசலகூடங்கள், வடிகால்கள் முதலியவற்றைச் சுத்தமான முறையில் பேணுவதில் திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

2. வயது - விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தெரிவு : தொழிற்பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்,

குறிப்பு ; 1994-04-08 ஆம் தேதியப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தாபனச் சுற்றறிக்கைக் கடித இல. 07/1994க்கு அமைய, உணவு முத்திரை/ ஜனசவிய விற்கு உரித்தான குடும்ப அங்கத்தவருக்கும், தீவிரவாதச் செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களுக்கும் அவற்றை அத்தாட்சிப்படுத்துமிடத்து மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது நிதிக் கிளையில் ரூபா 20/-ஐச் செலுத்தி மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும் தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை தபாற்கட்டளையுடன் 23×10 ச.மீ அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1994-09-14

(சி-10352)

## கார் ஏறிச்சென்றதால் படுகாயமுற்றார்

வீதியில் கிடந்தவருக்கு மேலாக கார் ஏறியதால் அவர் படுகாயம்அடைந்தார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கோவில் வீதியில் படுத்து இருந்த எஸ். ராமு (வயது 35) என்பவருக்கு மேலாக கார் ஏறிச் சென்றது. இதனால் படுகாயமுற்ற அவர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (86)

## இழப்பீடு வழங்க பணிப்பு

(கொழும்பு)

1980 ம் ஆண்டின், பொது வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும்படி பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## பதவி வெற்றிடம்

### வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்

(கோப்பாய் வட்டப்பிரிவு)

பதவி:- வெளிக்கள உத்தியோகஸ்தர்.
வயது:- 20 - 45 வரை
தகைமை:- க. பொ. த. ப (சா.த) கணிதம். தமிழ்மொழி திறமை சித்தி.

சங்க எல்லைப் பரப்பினுள் ஐந்து வருடகாலத்திற்கு மேல் நிரந்தரமாக வசித்து வருபவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்கள் 'செயலாளர், வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம், மே/பா இலட்சுமி நிலையம், கோப்பாய் சந்தி, கோப்பாய்' என்ற முகவரிக்கு 23-09-1994க்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ரீ. எஸ். சண்முகரத்தின சர்மா
செயலாளர்

(9425)

## முக்கிய அறிவித்தல்

### நல்லூர் வணிகர் கழகம்

எமது தாயகத்தின் விடுதலைக்காக நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்து உயிர் ஈந்த தியாகச் சுடர் லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாட்களை முன்னிட்டு 17-09-94 சனிக்கிழமை காலை 7-00 மணிமுதல் நல்லூரில், நல்லூர் வணிகர் கழகம் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளது. அன்றைய தினம் நல்லூர் வணிகர் கழகத்துக்குட்பட்ட அனைத்து துறை வணிகர் நிலையங்களையும் பூரணமாகப்பூட்டி அனைத்து வணிகர் பெருமக்களும் வணிக ஊழியர்களும் இந்த உணர்வுபூர்வமான உண்ணா விரதத்தில் தவறாது பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

'எம்மக்கள் அனைவரும் எழுச்சியுடையவர்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது'

- திலீபன்

நன்றி.

நல்லூர் வணிகர் கழகம்.

(சி-10351)

தியோகத்தர் மூலம் நடாத்தப்படவிருக்கும் இப்பயிற்சிகள் இம்மாதம், 22-ம்திகதி கொடிகாமம் வட்டச் செயலகத்தில் நது கொண்டு பயன்பெறுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கைத்தொழில் சிறப்பிதழாக ஆதாரம் வெளிவந்தது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வெளியிடப்படும் சமூக பொருண்மிய ஆய்வு இதழான ஆதாரம் சஞ்சிகையின் 13வது இதழ் கைத்தொழில் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

இவ் இதழானது தமிழீழ தேசியத் தலைவரின் பொருண்மியச் சிந்தனையை தாங்கி பா. மனோசரதாஸ் எழுதிய சுதந்திர பூமி எனும் சிறு கதையும், தே ஜெயராமன் எழுதிய முகாமைத்துவம், வே. பாலகுமாரன் எழுதிச் எமக்கென்றொரு கைத்தொழிற் கொள்கை, பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியன் எழுதிய வடகிழக்கின் கைத்தொழில் மேம்பாட்டில் உயர் நுட்பவியலின் பங்கு, வி.பி. யோசப் எழுதிய கைத்தொழிற்துறை ரீதியான சுதந்திர தமிழீழத்தின் எதிர்காலத்தேவை, ஈஸ்வரன் எழுதிய நூல்கள், சஞ்சிகைகள், அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரிவுபடுத்துகின்றன. ச. நகுலேஸ்வரன் எழுதிய கைத்தொழில் தொழில் நுட்ப புரட்சி மற்றும் தமிழீழத்தின் தொழிற்துறை, இயற்கை வளங்களைப் பாவித்து கைத்தொழில் மேம்பாடு. திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை மாணவிகளின் கைத்தொழில் பகுதியின் நோக்கு ஆகிய சிறப்புக் கட்டுரைகளையும், அ. திரியம்பதி, பே. ரஜனி ஆகியோரது நேரடி அறிக்கை, இயல்வாணன் எழுதிய கேட்டோம் சொன்னார்கள் வேலணையூர் சுரேசின் துணிவுள்ள மனிதம் கவிதை மற்றும் வழமையான அம்சங்களுடன் வெளிவந்துள்ளது.

## உதைபந்தாட்ட விதிகள் பற்றிய விரிவுரையும் கருத்தரங்கும்

யாழ். உதை. மத்தியஸ்தர் சங்கம் கணேசா நகையகத்தின் அனுசரணையுடன், உதைபந்தாட்ட விதிகள் பற்றிய விரிவுரைகளையும், விதிகளின் புதிய திருத்தங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினையும், 17-9-94 சனிக்கிழமை காலை 10 மணிமுதல் 1 மணி வரை யாழ். பரியோவான் கல்லூரியில் நடாத்த உள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளின் உதைபந்தாட்ட பயிற்றுனர்களும், விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்களும், எமது சங்க அங்கத்தவர்களும் தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

செயலாளர்,
யா. உ. ம. சங்கம்.

(9423)

டையிடும் அளவிற்கு பெருத்தது. இதில் ஒருவர் காயமடைந்தார். 52 வயதான முபேரின்பம் என்பவரே காயமடைந்தவர் ஆவார் இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி காவல் பணிமனையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது (86)

## மாடுகள் திருட்டு

(தென்மராட்சி)

பட்டியில் விடப்பட்டிருந்த மாடுகள் பட்டப்பகலில் கயிறு அறுத்து திருடப்பட்டுள்ளது. தனங்கிளப்பு பகுதியில் கோபாலு சிதம்பரப்பிள்ளை என்பவரது வீட்டில் பட்டியிவிடப்பட்ட ஐந்து மாடுகளும், மறவன்புலவு பகுதியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை குகநாதன் என்பவரது வீட்டில் விடப்பட்ட மூன்று மாடுகளும் கடந்த திங்களன்று பட்டப்பகலில் திருடப்பட்டதாக சாவகச்சேரி காவல் பணிமனையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது (86)

## குற்றப் பணம் செலுத்த தீர்ப்பு

(தென்மராட்சி)

பெண்களுக்கு இடையிலான சண்டை ஒன்றில் தலையிட்ட குடும்பத் தலைவர் ஒருவர், தடியினால் அடித்தமையினால் அவரது திருமணமாகிய மைத்துனி ஒருவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

இது குறித்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது நீதியாளர் சுடர், குற்றப்பணமாக ரூபா 750-ம் இழப்பீடாக ரூபா 500-ம் கட்டும்படி தீர்ப்பு வழங்கினார். அத்துடன் இப்பணத்தை கட்டத் தவறினால் 20 தினங்கள் கட்டாய சமூக சேவை செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (86)

## உறவிற் கலந்தோர்க்கு ஓராண்டு அஞ்சலிகள்!







| செல்வராசா யசோதா | கந்தையா செல்வராசா | செல்வராசா சுஜாதா |
| --- | --- | --- |
| மண்ணில்: 29-06-1976 | 18-12-1954- | 20-07-1977 |

மனதில்: 28-09-1993 திதி: 17-09-1994

குடும்பத்தலை மகனும் குலங்காக்கும் கொழுந்துகளும்
உடனொன்றாய் சென்றீர்கள் உணர்விழந்து வாடுகிறோம்.

புக்காரா ஏறிவந்த புல்லர்களின் கொடுங்குண்டால்
எக்காலமும் எம்மை ஏங்கியழச் செய்திரே

உங்கள் நினைவுகளைச் சுமந்து மனமுருகி
எங்கள் அஞ்சலிகள் ஈகின்றோம் அமைதி கொள்க!

★ இவர்களின் ஞாபகார்த்தமாக 28-09-94 அன்று உதயன் மரத்தொழிலகத்தில் நினைவுத்தூபி திறந்து வைக்கப்படும்,

உதயன் மரத்தொழிலகம்,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

திருமதி செ. மங்கையற்கரசி
(மனைவி, தாய்)
செ. உதயராசா
(மகன், தம்பி)

(9429)

## கல்வி அலுவலகங்களின் செயற்பாடு ஆராயப்படும்

-கல்வி அமைச்சர் பத்திரான

மாகாணக் கல்விக் காரியாலயங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றில் ஓய்வூதியம் பெறுதல், கடன் பெறுதல் போன்றவற்றில் ஏற்படும் தாமதங்களால் ஆசிரியர்கள் பெறும் பாதிப்பை நீக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களை திடீர் இடமாற்றம் செய்தல், ஆசிரியர்களின் ஆவணக் கோவைகள் காணாமல் போதல் தொடர்பாக தான் கவனம் செலுத்தி வருவதாகவும் கல்வி அலுவலகங்கள் ஆசிரியர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் சரியான முறையில் தொழிற்படுகின்றனவா என்பதை அறியும் நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடத்தப்பட இருந்த சிலை கீரிமலை கோவிலுக்குரியது

(கொழும்பு)

கடந்த வாரம், இராணுவ அதிகாரியொருவரால் தென் பகுதிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கடத்தப்பட இருந்த நடராஜர் சிலை கீரிமலை சிவன் கோயிலுக்குச் சொந்தமானது என தெரிய வந்துள்ளது.

இச்சிலை இப்போது காங்கேசன்துறை பொலிசார் வசமுள்ளது கடத்தலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.


### முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்:
31-3-1976

தாயக மண்ணில்:
28-9-1993

திதி: 17 - 9 - 1994

**2-ம் லெப்: காந்தரூபன்**
(சேனாதிராஜா ஜெயகாந்தராஜா)
(மயிலிட்டித்துறை, மயிலிட்டி.)

எங்கள் அருமைச் செல்வமே,
நாங்கள் இன்னல் படும் வேளை எல்லாம்
ஐயா, உன் இரு கரத்தாலும் சிரத்தாலும்
எங்கள் இன்னலை நீக்கி வைத்தாய்
தமிழீழ மீட்புக்கும் வளர்ச்சிக்கும்
சடுதியாய் ஏகினியே - ஐயா
காலன் உனை விட்டுவைக்காது கவர்ந்து
விட்டான்
ஆண்டு பல சென்றாலும் உன் நினைவு
மாறாதையா

உன் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டி நிற்கும்
அம்மா, அப்பா, அக்கா, அண்ணா
சூராவத்தை,


மக்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்

# சட்ட விரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் பறிமுதலாகும்

(கொழும்பு)

மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவர் சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தைக் கொண்டு சொத்துக்களை வாங்கியிருந்தால், அவ்வகையான சொத்துக்கள் பறிமுதலாகும் என அரசியலமைப்பு நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லஞ்ச திணைக்களத்தின் அதிகாரங்கள் குறித்து அரசாங்கம் திருப்தியடையவில்லை நடைமுறையிலுள்ள சட்டத்தின் படி ஓர் அமைச்சருக்கெதிராக இலஞ்ச குற்றச்சாட்டை கொண்டு வருவது கடினமான காரியமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிர. சபை தலைவர்களால் ஆடம்பரவாகனம் இறக்குமதி

(கொழும்பு)

தேர்தலை அண்மித்த நாட்களில் கொழும்பு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த ஆடம்பர வாகனங்கள் அனைத்தும் பிரதேசசபைத்தலைவர்களின் பேரிலும் மாகாண சபை உறுப்பினர்கள் சிலரின் பேரிலும் இறக்குமதி செய்யப்பட்டவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாகனங்களில் 95 க்கும் கூடுதலானவை அதிநவீன ஆடம்பர வாகனங்களாகும். அவற்றுள் இன்டோகூலர் பென்ஸ், பஜிரோ வண்டிகளாகும். ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இவ்வாகனங்களின் ஒன்றினது விலை 76 இலட்சம் ரூபாவாகும்,

இதேவேளை இவ் வாகனங்களைஇறக்குமதி செய்தோரில் பலர் சஷ்டப்பிரதேச பிரதேச சபை உறுப்பினர்களாவர். இப்பிரதேச சபைகளின் வருட வருமானம் கூட இப்பஜிரோ வாகனம் ஒன்றின் பெறுமதியைவிட மிகவும் குறைவானதென செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாகனங்கள் தொடர்பாக புதிய அரசு, அரச அதிகாரிகளின் பாவனைக்கு என இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதென ஏற்கனவே தீர்மானம் எடுத்தமை தெரிந்ததே.

## சிறுவன் கொழும்பில் மரணம்

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட சிறுவன்ஒருவர் கொழும்பில் மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானம்மூலம் கூட்டிச் செல்வதற்காக பருத்தித்துறை துறைமுகம் ஊடாக சென்ற இ பாஸ்கரன் [13] என்பவரே மரணமடைந்தார். (யோ)

## ஒரே பிர. செயலர் பிரிவில் 9கி.சேவகர்கள் தலைமறைவு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து ஒரே பிரதேச செயலகப் பிரிவை சேர்ந்த ஒன்பது கிராமசேவையாளர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தலில் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து உல்கடுவ பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஒன்பது கிராம சேவையாளர்களே இவ்வாறு தலைமறைவானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது,

## கடன் மீள் அறவீடு கலந்துரையாடல்

மன்னார் மாவட்ட செம்பன் குன்றுப் பகுதியில் கிராம மேம்பாட்டுத்திட்ட கோழி வளர்ப்புக்கடன் மீள் அறவீடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பெற்ற கடன்களை மீளளிப்புச் செய்வதன் மூலம் ஏனைய பயனாளிகள் நன்மை பெற முடியுமென்பதால் இம்மாத இறுதிக்குள் இக் கடன்களை கட்டி முடிக்குமாறு எடுத்துக் கூறப்பட்டது.

பல்வேறு கிராமங்கள் தோறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பல கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டுக் குற்றத்திற்கு அபராதம் செலுத்த தீர்ப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரிப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் சுமார் 4,500 ரூபா பெறுமதியான தேங்காய் எண்ணெயை திருடியதாக மூன்று பேர் சாவகச்சேரி காவல் பணிமனையினரால் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

நீதியாளர் சுடர் வழக்கை விசாரித்தார். குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஒவ்வொருவரும் தலா ஆயிரம் ரூபாவை குற்றப்பணமாகவும், தலா ஆயிரத்துஐந்நூறு ரூபாவை இழப்பீடாகவும் செலுத்தும் படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை செலுத்தத் தவறின் நாற்பது தினங்கள் கட்டாய சமூக சேவை எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## ஐ. தே. கவில் புனரமைப்பு கடந்த வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புனரமைப்பு வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வருவதாக ஐ தே க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் ஆரம்பகட்டம் கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் கட்சியில் புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் கிளைக் காரியாலயங்களை அமைத்தல்போன்ற நடவடிக்கைகள் விரைவில் நடைபெற இருப்பதாக மேலும் தெரிய வருகின்றது.

## மக்கள் தேவையைமதிப்பிட குடிசன ஆய்வு ஆரம்பம்

(கொழும்பு)

மக்களின் அடிப்படைத் தேவைகளை திட்டமிடுவதற்காக நாடளாவியரீதியில் குடிசன ஆய்வொன்று நடத்தப்பட உள்ளது. இதேவேளை இவ் ஆய்வு வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மட்டுமே நடைபெறவுள்ளதாக தொகைமதிப்புப் புள்ளி விபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி ஆய்வு இரண்டு வாரங்கள் நடத்தப்பட உள்ளன. வடக்கு கிழக்கு நீங்கலாக நாடு முழுவதிலிருந்தும் ஒரு இலட்சம் வீடுகளில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

இவ் ஆய்வின் போது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, வயது, எழுத்தறிவு, கல்வித்தரம், வேலை வாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகளுக்கான பங்களிப்பு, வீட்டுவசதி போன்ற விபரங்கள் சேகரிக்கப்பட உள்ளதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

ஆய்வு அறிக்கையை வைத்து எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை செய்ய அரசு உத்தேசித்திருப்பதாகவும், பத்து வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் குடிசன மதிப்பு கடைசியாக 1981 ஆம் ஆண்டு நடைபெற்றது. அடுத்த குடிசன மதிப்பு 1991 ஆம் ஆண்டு நடைபெற இருந்தது. அக்காலகட்டத்தில் அத்தகைய குடிசன மதிப்பீட்டை நடத்த முடியாமல் போனமையால் குடிசனவியல் ஆய்வொன்றை நடத்த தீர்மானித்ததாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பொலிஸ் பகுதியினருக்கு 100 பஜிரோ கொள்வனவு

உத்தரவு இட்டது யார் என தெரியாதாம்

பொலிஸ் திணைக்களத்தின் பெயரில் 100க்கு மேற்பட்ட பஜிரோ ஜீப்வண்டிகள் இறக்குமதி செய்யப்பட்டு கொழும்பு துறைமுகத்தில் கடந்த சில தினங்களாக வைக்கப்பட்டுள்ளன. இவை பொலிஸ் திணைக்களத்துக்கென கூறப்பட்டாலும் இவற்றை இறக்குமதி செய்ய உத்தரவிட்டது யார் என்று தெரியவில்லை என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மார்பு புற்று நோய் பரம்பரைதொடர்புடையதா

அமெரிக்காவில் ஆய்வு

(கொழும்பு)

மார்பில் ஏற்படும் புற்றுநோய் சில சந்தர்ப்பங்களில் பரம்பரை நோயாக இருக்கிறதென அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

மார்பு புற்றுநோய் ஏற்படும் நோயாளிகளில் 50 சதவீதமான நோயாளிகள் பரம்பரையாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்வதற்கான பரிசோதனைகள் அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றன.

இப்புற்றுநோய் பெண்களின் இரத்தத்திலுள்ள அணுக்களினால் மார்புப்புற்றுநோய் ஏற்படுகின்றது.

அம்மா, அப்பா, அக்கா, அண்ணா

குராவத்தை,
சுண்ணாகம். [9416]

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 14-01-1939

ஆண்டவன் அடியில் 20-08-1994

அமரர் திருமதி

### இராசரட்ணம் சின்னம்மா (குஞ்சு)

அம்மா அம்மா என அழுது புரண்டாலும் ஆண்டாண்டு காலம் ஆகியே சென்றாலும் ஆறாது எம் துயர் ஆயினும் ஆண்டவரை சரணடைந்தார் என்று அமைதியாய் இருப்போம்.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் அனுதாப ஆறுதல், செய்திகள் அனுப்பி வைத்தோருக்கும், பலவித உதவிகள் புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் திங்கட்கிழமை (19-09-94) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்தி பிரார்த்தனை, மதிய போசனம் முதலியவற்றில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி.

'மதிபவனம்' கணவர், பிள்ளைகள்,
தாமோதரம்பிள்ளை வீதி, மருமக்கள்,
சாவகச்சேரி. (9420) பேரன்.

## 1 ஆம் ஆண்டு இதய அஞ்சலி





| செல்வி | செல்வி |
|---|---|
| கோபாலரத்தினம் | கோபாலரத்தினம் |
| சுபாஜினி | சுரேகா |

(சாவ. இந்துக்கல்லூரி ஆண்டு 9, ஆண்டு 5 மாணவிகள்)

மண்ணில்: 28-03-1979 / 09-11-1984

மனதில்: 28-09-1993

யாழ்தேவி தடம்புரளப்
பாழ்போன அன்னியரின்
புக்காரா பொழிந்த கொடுங்குண்டால்...
தாழ்வேது மில்லாத தங்கங்கள் இருபதுபேர்
தரணியிலே உயிரிழந்து ஓராண்டோ...?
செல்வங்காள்...
அக்காவும் தங்கையுமாய்
அன்பிணைந்து சென்றிட்டீர்
எக்கால மும்ஆறாப் பெருந்துயரம்
மாறாத நினைவுகள் சுமந்து
மாற்றுக் குறையாத உங்கள் நினைவுகளால் வாடி
ஆறாத மனத்தோடு எங்கள்
அஞ்சலிகள் படைக்கின்றோம்...

சங்கத்தானை, -பெற்றார், உடன்பிறப்புகள்,
சாவகச்சேரி. (9419) உறவினர்கள்.

அணுக்களினால் மார்புப்புற்றுநோய் ஏற்படுகின்றது. இந்நோய் ஏற்படுபவர்களில் 50 சதவீதமான நோயாளிகளின் பரம்பரைக்கு இது தொற்றிக் கொள்கிறது. இந்நோய்க்கு காரணமான இரத்தத்தில் உள்ள அணு சம்பந்தமாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பரிசோதனைகள் நடைபெற்றன. இப்பரிசோதனை நீண்டநாள் நடத்தப்படவேண்டுமெனவும், உடனடியாக இது பற்றி எந்த முடிவையும் சொல்ல முடியாதெனவும் புற்றுநோய் ஆராய்ச்சியாளர் பயஸ்ஐஸ்மான் கூறியுள்ளார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதி அழைப்பும்



மலர்வு: 03. 03. 81

பறிப்பு: 28. 09. 93

### செல்வி கணேசன் கௌசிகா

(யாழ். புனித கன்னியர் மடம்)
(யாழ். சாவ. இந்துக் கல்லூரி மாணவி)

அன்புக்கோர் உறைவிடமாய்
அனைவரின் மனதிலும் நிறைந்த
எம்மினிய கௌசிக் குட்டியே
எமையெல்லாம் தவிக்க வைத்து
விண்ணகத்தை அடைந்து ஓராண்டு
ஆகினும் உன் நினைவு என்றும் எம்மோடு...
உன் அன்பு முகத்தை காணாது தவிக்கின்றோம்
உன் பிரிவால் வாடுகின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி, சாந்தி - சாந்தி

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணா சிவதாஸ்,
(9406) அக்காமார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## சிந்தனைக்கு..

இறந்த மீன்கள் தான், நீரோடையில் தண்ணீர் ஓட்டத்துடன் நீந்திச் செல்கின்றன

- மால்க்கம் மக்கரிட்ஜ்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 17 09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்- 05

## திசை மாறும் தொண்டமான்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான தொண்டமானின் அரசியல் நிலைப்பாட்டில் தெளிவான மாற்றம் தெரிவதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இதன் பிரகாரம் ஐ.தே.கவுடனான 20 வருடத்திற்கு மேற்பட்ட 'நட்புறவை' உடைத்துக் கொண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளலாம்/ ஆதரவளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

திரு. தொண்டமானின் இவ்வாறான நிலைப்பாடு மாற்றம் பெரிதாக ஆச்சரியமளிக்கக் கூடியதொன்றல்ல: 'மலையக மக்களின் நல்வாழ்வே எமது ஒரே இலட்சியம்' எனக் கூறிக் கொண்டு எந்த கட்சி மாற்றத்தையோ, எந்த வகையான 'குத்துக்கரணங்களையோ' தொண்டமான் அடிக்கக் கூடியவர் என்பது கடந்த கால வரலாற்றில் பல இடங்களில் பதிவாகியே உள்ளன. இந்த வகையில் மலையக மக்களின் நலன் என்ற ரீதியில், தனது நலன் பேணும் நடவடிக்கைக்காக இன்னும் பல குத்துக்கரணங்களை அவர் அடிப்பதில்/ அடிக்கவுள்ளதில் ஆச்சரியம் இல்லைத்தான்.

ஆனால் இது எவ்வாறாக இருப்பினும், கடந்த பொதுத்தேர்தலில், திரு. தொண்டமானின் அரசியல் கணிப்பீடு தவறிவிட்டது என்றே கூற வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் - அதாவது தேர்தலில் தமது ஐ.தே.க. கூட்டணி தோல்வியடையும் என அவர் கணிப்பிட்டிருந்தால் ஒன்று ஐ.தே.கவுடன் தேர்தல் கூட்டு வைத்திருக்கமாட்டார். அவ்வாறுதான் வைத்திருந்திருப்பினும், தனிச்சின்னத்தில் போட்டியிட்டிருப்பார்- இன்று அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பதான முடிவை எடுத்திருக்கமாட்டார்.

இதேசமயம் தொண்டமானின் அரசியற் கணிப்பீட்டில் நடந்தது ஒரு தவறு அல்ல; இரண்டு தவறுகள். அதிலும் இரண்டாவது தவறு தொண்டமானின் அரசியல் அத்திவாரத்தையே ஆட்டம் காண வைத்துவிடக் கூடியதாகும். அதாவது மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனின் வெற்றியும், அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் பெறுவ

# விடியலைத் தேடிய தோழன் திலீபன்

தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் அவன் உண்ணாவிரதம் இருந்த நாட்கள் தமிழர் நெஞ்சங்கள் எரிமலை ஆக்கப்பட்ட நாட்களே!

புரட்சியை விதைத்து கண்களை மூடினான் திலீபன்.

திலீபன்சின்னவயதில் தாயை இழந்தவன். ஆனால் பிறப்பதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே அவன் தன் தாயகத்தை இழந்திருந்தான். 1621-ம் ஆண்டுசங்கிலி மன்னன் காலத்தில் தமிழீழம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டது. அன்று தொடக்கம் தமிழ் மக்கள் தமது தாயகத்தின் இறைமையை இழந்தனர். யாழ்ப்பாணத்தில் ஊரெழு என்னும் அழகான கிராமத்தில் பிறந்த திலீபனுக்கு அவன் அன்னையின் இழப்பை விட அன்னை மண்ணின் இழப்பே பெரிதாகத் தோன்றியது.

போர்த்துக்கீசனுக்குப் பின் டச்சுக்காரன் அவனைத் தொடர்ந்து ஆங்கிலேயன் பின்னால் சிங்களவன்-எத்தனை ஆண்டுகளாக எத்தனை மனிதர்களுக்கு என் மக்கள் அடிமைகளாக..? இந்த உணர்வுதான் திலீபன்

திலீபன் பாசம் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவன் நாளை கனிகளோடு குலுங்கும் என்று அவன் தந்தை எதிர்பார்த்த காழுத்த மாந்தோப்பு அவன் நன்கு படித்திருந்தான் நுண்ணிய அறிவு மிக்கவன் யாழ்- பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அவனுக்கு இடம் கிடைத்திருந்தது- ஆனால் டாக்டராக வருவதை விட மக்களுக்காக போராடவே அவன் விரும்பினான்- களத்தில் நின்று போராடி சிங்கள வெறிப்படையின் குண்டு துளைத்த உடலோடு பலவீர வடுக்களை ஏந்தியவன் திலீபன்

திலீபனின்பள்ளி வாழ்க்கை ஒளி நிறைந்தது லெப். கேணல் பொன்னம்மான். லெப். கேணல் ராதா, மேஜர் கேடில்ஸ் போன்ற மறைந்த மாபெரும்விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எந்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் பயின்றார்களோ- அங்கே தான் திலீபனும் பயின்றான் படிப்பைப் போலவே விளையாட்டிலும் அவன் புலி-யாழ் மாவட்ட ''செஸ்'' போட்டியில் ஒரு முறை அவனுக்கு முதல் பரிசு.

ஓர் ஆசிரியர் திலீபனைப் நான் சந்தித்த மாணவர்களில் திலீபன் வேறுபட்டவன் அவன் ஒரு தனி ஆற்றல் படைத்தவன்.

சிங்கள இனவாத அரசின் கொடுமையைக்கண்டு திலீபன் குமுறினான். பெண்கள் கற்பழிக்கப்படுவதும் - குழந்தைகள் உயிரோடு எரிக்கப்படுவதும் தமிழீழத்தில் தொடர் நிகழ்வுகளாகவே இருக்குமா? விடிவே இல்லையா? பாராளுமன்ற அரசியல்வாதிகள் மேடைகளை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மேடையில் ஓசைகளே நிரம்பி வழிந்தன. திலீபன் பாராளுமன்றத்திற்கு வெளியே தமிழர்களின் போராட்டம் தேவை என்பதை உணர்ந்தான். காடுகளிலும் மேடுகளிலும். விடுதலை வேட்கை கொண்டு துப்பாக்கியோடு அலைந்து தமிழீழ மக்களின் ஒப்பற்ற தலைவர் பிரபாகரனை இந்தக் காலத்தில் தான் அவன் தலைவராக ஏற்றுக் கொண்டான்.

23-07 83இல் 13 சிறிலங்காப் படைவீரர்களை விடுதலைப் புலிகள் திருநெல்வேலியில் பிணங்களாய் வீழ்த்தினார்கள். சிறிலங்கா அரசு நிலைகுலைந்து போயிற்று வெறி கொண்ட சிங்கள பேரினவாதிகள் தமிழீழத்தை இரத்தத்தால் குளிப்பாட்ட முனைந்தார்கள் அச்சம் நிறைந்த இந்தக் காலகட்டத்தில்தான் திலீபன் குறுகிய ஒற்றையடிப் பாதைகள் வழியாக கிராமங்களைத் தொடர்பு கொண்டு விடுதலைப் புலிகள் என்னும் இயக்க விதைகளைத் தூவினான். மிதிவண்டியில் அவன் காற்றாய்ப் பறந்த காலமது.

சிறிலங்கா அரசின் புலனாய்வாளர்கள் யாழ்ப்பாணத்தில் நிறைந்துபோய் இருந்தார்கள். அடையாளம் தெரியாத எந்த மனிதனும் உளவுத்துறையைச் சேர்ந்தவனாக இருப்பானோ என்று மக்கள் அஞ்சிய காலம். திலீபன் மாணவர்களையும், உழவர்களையும், தொழிலாளர்களையும் ஓடி ஓடித் தொடர்பு கொண்டான். தலைமறைவு வாழ்வுக்கு இளைஞர்களைத் தயார் செய்வது அன்று அவன் மேற்கொண்டிருந்த பணி.

திலீபனின் பேச்சில் அழுத்தம் இருக்கும். கத்தியை பல முறை தீட்டுவதைப்போல ஒன்றையே திரும்பத் திரும்ப

திலீபன் களம் கண்டவன் விடுதலைப் புலிகள் பெற்ற பல வெற்றிகளில் அவனுக்குப் பங்குண்டு யாழ் மாவட்டத்தில் நடந்த பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் முகாம்களை விட்டு வெளியே வர முனைந்த சிங்களப் படை வெறியர்களோடு மோதிய சண்டைகளிலும் திலீபன் துப்பாக்கியும் கையுமாக வீர உலா வந்தான். அவன் உடல் எதிரிகளின் துப்பாக்கிக்குண்டுகளால் துளைக்கப்பட்ட நிகழ்வுகள் பல உண்டு;

நவாலி யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஓர் கிராமம் ஒருநாள் இயக்கத் தோழர்களை காணச் சென்றிருந்த திலீபன் நவாலித் தெரு ஒன்றில் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றான். ஒரு சிங்கள பொலிஸ் ஜீப் வண்டி உறுமிக் கொண்டே பக்கத்து வீதியால் திரும்புகின்றது. பதற்றம் எதுவுமின்றி மெதுவாக கலைந்து செல்லுங்கள் என்று நண்பர்களிடம் சொல்கிறான். திலீபன் சூட்கேசும் கையுமாக எங்கோ பயணம் செய்கின்றவனைப் போல் டஸ் தரிப்பு நிலையத்தில் அவன் வந்து நின்றான். ஜீப் வண்டி வேகமாகப் பக்கம் வருகின்றது துப்பாக்கி தாங்கிய பொலிஸ்காரர் ஜீப்பில் இருந்து தாவித் திலீபனை வளைத்துக் கொள்கிறார். ''போடா போய் ஜீப்பில் ஏறு'' ஒரு பொலிஸ்காரன் உறுமுகிறான் திலீபனுக்கு நிலைமை புரிகிறது அவன் ஒரு கெரில்லாப் போராளி நடுங்கிக் கொண்டே ''ஜீப்'' வண்டியை நோக்கி நடப்பவனைப் போல் ''பாசாங்கு'' செய்கிறான். திடீரென்று கையிலிருந்த ''சூட்கேசால்'' பக்கத்தில் நின்ற பொலிஸ்காரனை ஓங்கி அடிக்கிறான். திலீபன் மின்னல் வேக நிகழ்வுகள் சிங்களப் பொலிஸ் படையின் இயந்திரத் துப்பாக்கிகள் அதிர்ந்து முழங்குகின்றன. ஆனால் திலீபன் அந்த நொடிப் பொழுதில் பக்கத்தில் இருந்த கடைக்குள் பாய்ந்து பின்புறமாகத் தப்பி விடுகிறான். அவனது இடது கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இரத்தம் பொங்கி வழிகிறது -- ஆம் குண்டுகளுக்கும் இரத்தத்துக்கும் நடுவில் தான் திலீபன் வாழ்ந்தான்.

திலீபனின் இலட்சியவெறி 24 மணி நேர உழைப்பு, அசையாத வீரம், ஈடிணையற்ற போர் ஆற்றல். அரசியல்தெளிவு, மக்கள் நெஞ்சங்

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்திய கெரில்லாத் தாக்குதல்களின் விளைவு 1985 இன் நடுப்பகுதியில் படை, முகாம்களை விட்டு வெளியே நகர முடியாத நிலை சிறிலங்கா படைகளுக்கு ஏற்பட்டது யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்தது. இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் நிழல் அரசாங்கத்தை நிறுவுவதில் திலீபன் இரவு பகலாக உழைத்தான்.

திலீபன் இந்தக் காலத்தில் பல அமைப்புகளை உருவாக்கினான் கிராம நீதிமன்றம் திலீபனால் உருவாக்கப்பட்டது தமிழீழத்தின் பழமைவாத முதலாளித்துவ அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு நிவாரணம் பெற்றார்கள்.

தமிழீழப் பெண்கள் அரசியல் தெளிவு பெறவும் ஆயுதப் போராளிகளாக மாறவும் தமிழீழவிடுதலைப் போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவும் திலீபன் 'சுதந்திரப் பறவைகள்' எனும் மகளிர் அமைப்பை நிறுவினான் இந்த அமைப்பில் உருவாகிய பல பெண் விடுதலைப் புலிகளை இன்று களத்தில் பார்க்கிறோம்

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ''விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தை'' திலீபன் அமைத்தான் இந்த அமைப்பு பெரும் புயலாய் வீசிற்று மாணவர்கள் தமிழீழ விடுதலைப் போரில் வெறி கொண்டு பாய்ந்தார்கள்.

கடல் தொழிலாளர் அமைப்பு - கலாசாரக்குழு -சிவில் தொழிலாளர் சங்கம் கூலி விவசாயிகள் சங்கம் - அபிவிருத்திக் குழு-பத்திரிகையாளர் சங்கம் இவையெல்லாம் திலீபனால் நிறுவப்பட்டவை

தமிழீழ மக்களைத் தொடர்பு கொள்ள ஒரு செய்தி ஏடு தேவை என்பதை உணர்ந்த திலீபன் ''களத்தில்'' என்ற சூடான செய்தி ஏட்டை வெளியிட்டார் ஷெல்'கள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருக்கும் இரவு நேரங்களில் அவன ''களத்தில்'' ஏட்டுக்கு செய்தி திரட்ட வீதிகளில் நடந்து கொண்டிருந்தான் தூக்கமே இல்லாத இரவுகள்...

விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் அமுதமாயிற்று.

சமூக- பொருளாதார கலாசார விடுதலையை பல்வேறு அமைப்புக்கள், எடுகள் போராட்டங்கள் மூலம் செயல் படுத்தி தமிழீழ மக்களின் முழுமையான விடுதலைக்குத் திலீபன் வித்திட்டான்.

திலீபன் ஆடம்பரங்களை வெறுத்தான். சுகம் அவனுக்குத் தேவைப்படவில்லை, கடைசிக் காலத்தில் அவன் கையில் இருந்தது ஒரு ''சேட்டும் பாண்டும்'' மட்டுமே; இரவு 12 மணிக்கு இரண்டையும் தோய்த்துப் போடுவான்.

காலை 5 மணிக்கு மீண்டும் அவற்றையே பாதிஈரத்தோடு அணிந்து கொள்வான்,

திலீபன் இந்தியாவை நேசித்தான் இந்திய அரசின் ஒப்புதலோடு தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும்என்று உணர்வுபூர்வமாக நம்பினவன் அவன். 29-07-87 இல் ஏற்பட்ட ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்படிக்கையை சிறிலங்கா அரசு மீறிய போது இந்திய அரசிடம் நீதிகேட்டு 5 அம்சக் கோரிக்கையை முன் வைத்துத் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டான். ஆனால் இந்திய அரசின் மௌனமே திலீபனைப் பிணம் ஆக்கிற்று.

இந்தியா மீது தமிழீழ மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு இந்திய அரசு வைத்த நெருப்புத்தான் 'திலீபன் மரணம்'

தமிழீழத்தைப் பொறுத்தவரை திலீபனின் மரணம் ஒரு புதிய எழுச்சியின் பிறப்பு ஆகியிருக்கிறது.

ஒவ்வொரு நொடிப் பொழுதும் இனி அந்த மண்ணில் போர் முரசு ஓங்கி முழங்கும்.

எத்தனை பெரிய வல்லமையையும் தமிழீழ மக்கள் துணிச்சலோடு எதிர்கொள்வார்கள்

யல் அத்திவாரத்தையே ஆட்டம் காண வைத்து விடக் கூடியதாகும். அதாவது மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனின் வெற்றியும், அவர் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் பெறுவதுமாகும்.

திரு. சந்திரசேகரன் மலையகத்தில் வெற்றி பெற்றதானது 'ஒரு அரசியல் விபத்து' என தொண்டமான் கூறிக் கொண்டாலும், அது ஒரு விபத்து அல்ல. இ. தொ. காவிற்கு மலையகத்தில் எழுந்துள்ள மறுக்க முடியாத ஒரு சவாலாகும். மலையக தமிழ் மக்களின் தனிப் பெரும் தலைவர் எனத் தன்னைத் தொண்டமான் இனியும் கூறிக் கொள்ள முடியுமா? என்ற கேள்வியை எழுப்பிய வெற்றியாகும். அதிலும், அமைச்சர் பதவியைச் சந்திரசேகரன் பெற்றுக் கொண்டிருப்பது, எதிர்காலத்தில் மக்கள் முன்னணியின் பலத்தை மேலும் அதிகரிக்கப் பெரிதும் உதவக் கூடியதாகும்.

இந்நிலையில், ஐ. தே. க. இ. தொ. கா கூட்டணி தேர்தலில் தோல்வி அடைந்ததிலும் பார்க்க சந்திரசேகரனின் வெற்றியே தொண்டமானை ஆட்டம் காணச் செய்யக் கூடியதாகும். இதன் காரணமாகவே, ஐ-தே-கவுடனான 20 வருடத்திற்கும் மேற்பட்ட நட்புறவை உடைத்துக் கொண்டு தொண்டமான் பொ- ஐ- முன்னணிக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளமையாகும்.

பொதுத் தேர்தலில் ஐ-தே-கட்சி சின்னத்தில் போட்டியிட்டதினால் பொ-ஐ-முன்னணிக்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில், பாராளுமன்ற ஆசனங்களை இழக்க வேண்டி வரலாம் என்பதும் தொண்டமானுக்குத் தெரியாததல்ல. ஆனால் அது குறித்து அவர் பெரிதாக கருத்திற் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. 'பொ. ஐ-முன்னணி அரசிற்கு ஆதரவு அளிக்கும் பட்சத்தில், ஐ-தே-கட்சி எம் மீது நடவடிக்கை எடுக்கும்- ஆனால் இதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை- வருவது வரட்டும்' எனத் தொண்டமான் தெரிவிக்கும் அளவிற்கு தனது நிலைப்பாட்டில் மாற்றம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு உருவாகியுள்ளது என்பதே உண்மையாகும்-

தொண்டமான் இந்நிலைப்பாட்டின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவிபோனாலும், ஜனாதிபதித் தேர்தலில் பொ-ஐ- முன்னணிக்கு ஆதரவளிப்பதன் மூலம் தனது அரசியற் தளத்தை காப்பாற்றிக் கொள்வதோடு, பொ-ஐ-முன்னணிக்கு தனது அரசியற்பலத்தை வெளிப்படுத்தலாம் எனக் கருதுவதாகத் தெரிகின்றது, அவ்வாறு நிரூபிக்கப்படும் பட்சத்தில் பின்னர் பொ-ஐ-முன்னணியிடம் இருந்து பெறுவதைப் பெற்றுக் கொள்ளலாம் எனத்திட்டமிடுவதாகவும் தெரிகின்றது-

அதாவது மலையகத்தில் தனக்கு எதிராக உருவாகிவரும் அரசியற் சக்தி ஒன்றைக் கிள்ளி எறிவதோடு, அரசாங்கத்தில் அங்கம் பெற்றுவிடலாம் என்பதுமே அவரின் புதிய அரசியற் கணிப்பீடாகும்.

---

மாவட்ட ''செஸ்'' போட்டியில் ஒருமுறை அவனுக்கு முதல் பரிசு.

ஓர் ஆசிரியர் திலீபனைப் பற்றி இப்படிக் கூறுகிறார்.

''எனக்கு இன்னும் பசுமையாக இருக்கிறது படிப்பில் திலீபன் முதன்மையானவன். ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவனிடம் நிறைந்திருந்தது.

திலீபனின் பேச்சில் அழுத்தம் இருக்கும். கத்தியை பல முறை தீட்டுவதைப்போல ஒன்றையே திரும்பத் திரும்ப சொல்வான். அவன் பேச்சுக்கள் மக்களின் காதில் விழவில்லை நெஞ்சில் விழுந்தது. அவன் குரல் கேட்ட இடத்திலெல்லாம் மக்கள் நெருப்பாக நின்றார்கள்,

திலீபனின் இலட்சியவெறி 24 மணி நேர உழைப்பு, அசையாத வீரம், ஈடிணையற்ற போர் ஆற்றல். அரசியல்தெளிவு, மக்கள் நெஞ்சங்களைத் தொடும்திறன், இயக்கத்தைக் கட்டிவளர்க்கும் வல்லமை இவற்றால் தான் யாழ் மாவட்டத்தளபதிகிட்டு திலீபனை யாழ் மாவட்டத்திற்கு அரசியல் பொறுப்பாளர் ஆக்க முடிந்தது.

அவன 'களத்தில்' ஏட்டுக்கு செய்தி இரட்ட வீதிகளில் நடந்து கொண்டிருந்தான் தூக்கமே இல்லாதஇரவுகள்... அவன் விழித்திருந்து எழுதிய எழுத்துக்கள் யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல-வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை இங்கெல்லாம் இருந்த

எத்தனை பெரிய வலிமையையும் தமிழீழ மக்கள் துணிச்சலோடுஎதிர்கொள்வார்கள்

அந்த மக்களுக்கு திலீபன் ஒரு புலி மட்டுமல்ல - திலீபன் ஒரு வழி

நன்றி:- தமிழீழம்

---

# சு.க. தலைமைக்கு எதிராக மின்தேனியாவில் உண்ணாவிரதம்

சுதந்திரக் கட்சித் தலைமைக்கு எதிராக கட்டுவான பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஏ.கே சிறிசேன உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார் மின்தெனிய நகரில் இவ் உண்ணாவிரதம் ஆரம்பமாகியுள்ளது தென் மாகாண சபையின் உறுப்பினரான செல்வி நிருபமா ராஜபக்ஷா பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு 14172 விருப்பு வாக்குகளைப் பெற்றதான் நியமிக்கப்படாதமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே இவர் இப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

திரு சிறிசேன தன் வசம் நச்சுத் திராவகம் அடங்கிய ஒரு போத்தலை வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. திரு சிறிசேனவின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக மின்தெனிய நகரப் பகுதியில் கடைகள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்தவாரம் சுதந்திரக்கட்சியின்மத்தியகுழு கூடியபோது சிறி சனாவின் விடயத்தில் கட்சித் தலைமையின்போக்கு குறித்து அதிருப்திதெரிவித்துள்ளனர்.

உண்ணா விரதத்தை ஆரம்பிப்பதற்குமுன்பாக,கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு அவர் எழுதியுள்ள நீண்ட கடிதம் ஒன்றில், 1969ம் ஆண்டு முதல் சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக, தான் இருந்து வருவதாகவும், ஐ தே.கவின் குண்டர்களால் 1982-ம் முல்கிரிகல இடைத் தேர்தலின் போது பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நிருபமா ராஜபக்ஷ வெறிதாக்கப்பட்ட இடத்திற்கு கட்சித் தலைமை நியமித்து இருப்பவர் தேர்தல்களில் கட்சிக்கு எதிராகசெயற்பட்டவர் என்பதுடன் ஐ தே.கவின் உறுப்பினர் எனவும் இவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாத்தளை நகர உறுப்பினர் கொலைவழக்குஒத்திவைப்பு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட மாத்தளை மாநகர முன்னாள் உறுப்பினர், உசன் தொடர்பான விசாரணை கடந்த புதனன்று மாத்தளை மாவட்ட நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது எதிரிகளான ஒன்பது சந்தேக நபர்களும் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதையடுத்து வழக்கு விசாரணை இம்மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# வர்த்தக ஊழியர்களும் கலந்துகொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில்வீதியில் நடைபெறும் தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ம் ஆண்டு நினைவுதின உண்ணாவிரத நிகழ்வில் இன்று வர்த்தக ஊழியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே அனைத்து வர்த்தக ஊழியர்களையும் இன்றைய உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ் வர்த்தக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

# இ.போ.ச. சேவை மீண்டும் ஆரம்பிக்கும்

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையையும் தனியார் பஸ் சேவையையும் இணைத்து புதிய ஓர் சேவையை ஆரம்பிக்க அரசு திட்டமிடுவதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திருமதி சிறிமாணி அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து சபையில் நடைபெற்ற ஊழல்களையும் அமைச்சு விசாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உருளைக்கிழங்கு செய்கைக்கு கடன்

யாழ் மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் உருளைக் கிழங்குச் செய்கையாளருக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வகையில் 94/95 காலபோகத்தில் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபடவிருக்கும் விவசாயிகளில் நல்லூர் வட்டத்தில் 09 பயனாளிகளுக்கும், உடுவில் வட்டத்தில் 111 பயனாளிகளுக்கும், கோப்பாய் வட்டத்தில் 231 பயனாளிகளுக்குமாக மொத்தம் 351 பயனாளிகளுக்கு இக்கடன் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 9 - 17**
**சனி இரவு**

08 01 - தியாகதீபம்லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி எழுமலை எழுதிய ''தியாக தீபம் திலீபன்''

08. 25 - நேயர் கடிதங்கள்

08. 30 - செய்திகள்

08. 40 - சிறப்பு நிகழ்ச்சி - லெப்டினன்ட் கேணல் ஜஸ்ரின் நினைவாக ஈழதாசன்குழுவினர் வழங்கும் வில்லிசை

**1994 - 9 - 18**
**ஞாயிறு காலை**

07. 02 - மாவீர வணக்கம்

07. 15 - களத்தில் மலர்ந்தவை

07. 30 - செய்திகள்

07 35 - பத்திரிகைச் செய்திகள்

07 40 - தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 7ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - ஞானரதன் எழுதிய ''திலீபன்''

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வீடுகள் உடைமைகள் சேதமடைந்த

## 42 அரச ஊழியருக்கு நட்டஈடு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வீடுகள் மற்றும் உடைமைகள் சேதமடைந்தமை சம்பந்தமாக புனர்வாழ்வு அமைச்சிடம் நஷ்டஈடு கோரியிருந்தவர்களில் நாற்பத்திரண்டு யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர்களுக்கு காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டுக்குப்பின்னர் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையினால் பாதிப்படைந்த அரச ஊழியர்களின் நஷ்டஈட்டுப்பணமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் இந்த நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்த போதிலும் நிதிப்பற்றாக்குறை காரணமாக 92ஆம் ஆண்டுடன் இந்த புனர்வாழ்வுக்குரிய பணம் வழங்கல் அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டிருந்தது

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ். செயலகம், பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் நஷ்டஈட்டுப்பணமே இதுவெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நஷ்டஈடு ஒன்றரை இலட்சம் வரையானது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(88)(தி)

### விடுமுறை தினம்

(குருநகர்)

தியாகி திலீபனின் 7-ம் ஆண்டு நினைவாக எதிர்வரும் 20-ம் திகதி செவ்வாய்க்கிழமையை வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ். கிளை விடுமுறை தினமாக அறிவித்துள்ளது.

அன்றைய தினம் யாழ். ஓட்டுமடம் பகுதியில் நடைபெறும் சிரமதானப் பணியிலும் மேற்படி சங்க உறுப்பினர்கள் கலந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(21)

### தற்காலிக நிறுத்தம்

(கொழும்புத்துறை)

யாழ் செயலக பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் அலுவலகத்தில் 31-07-1954 ஆம் ஆண்டுக்குப் பின் பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களை ஏற்பது தற்காலிகமாக மறு அறிவித்தல் வரும்வரை நிறுத்தப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாக மேலதிக பதிவாளர் திரு அ. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவசர தேவைக்கும், குடும்ப அட்டைக்கான பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் மட்டும் தற்போது ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (24)

### 20 எழுதுவினைஞர்

சாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவசர வானொலி மூலம் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

அவரது செய்தியில், நியமனமாவோரின் கடிதங்கள் இன்னும் சில தினங்களில் யாழ். வந்து சேரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியமனம் செய்யப்படும் இருபது பேரும் எழுது வினைஞர்கள் என்றும் இவர்கள் யாழ். மாவட்டத்தின் மக்கள் வங்கிக் கிளைகளில் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

### தியாகி

தியாகத்தை உணர்த்தும் உரைகள் இடம்பெறுகின்றன இதேசமயம், திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவில் இரண்டாம் நாள் நிகழ்வில் பல இடங்களில் சிரமதானங்கள் இடம்பெற்றன.

யாழ். போதனா வைத்தியசாலை வளவில் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சிரமதானத்தில் நேற்று ஈடுபட்டனர். (தி)

### கூட்டுறவு

இன்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இச்சீனி ப. நோ. கூ சங்கங்களால் ஒரு கிலோ முப்பத்தைந்து ரூபாவிற்கு விற்பனை செய்வதற்காக புனர் வாழ்வுப் பகுதியால் ஒரு கிலோ முப்பத்திமூன்று ரூபாவாக விநியோகிக்கப்படுகிறது. (88,தி)

திங்கள் முதல் (19-09 1994)
உங்கள் கைகளில் தவழ இருக்கின்றது
வாங்கிப் படிக்கத் தயாராகுங்கள்

அரசியல் அமைப்பு ரீதியான

# மேலதிக உத்தரவாதங்களை புலிகள் பெற்றுக்கொள்ள வேண்டும்

## பிரபல இந்திய பத்திரிகையாளர் குல்தீப்நாயர்

(டில்லி)

இந்தியாவின் அனுபவங்களிலிருந்து விடுதலைப் புலிகள் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். அரசியலமைப்பு ரீதியாக மேலதிக உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். உதாரணமாக உயர் நீதிபதிகளைக் கொண்ட ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட்டு மாநிலத்திற்கு எதிரான அரசியலமைப்பை மீறும் நடவடிக்கைகளை சட்டுப்படுத்துவதுபோன்ற ஏற்பாடுகள் இருக்கவேண்டும் இவ்வாறு இந்தியாவின் பிரபல அரசியல் விமர்சகரான குல்தீப் நாயர் கூறியுள்ளார்.

ஐலண்ட் நாளிதழில் அவர் எழுதியுள்ள கட்டுரையொன்றில் அவர் மேலும் குறிப்பிடுகையில் யாழ்ப்பாண மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்ச்சி உடையவர்கள் என்பதால் கஷ்மீரைப்போல தேர்தல் தில்லுமுல்லுகள் செய்யப்படும் சாத்தியம் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அது தமிழரின் பிரச்சினை இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குள்ளாக தீர்த்துவைக்கப்படவேண்டும் என பல தடவை கூறிவருகிறது. ஆனால் விடுதலைப் புலிகள் இதை ஏற்பார்களா என்பதை நாம் அனைத்து வழிகளிலும் தீவிரமாக பரிசீலிக்க வேண்டும். ராஜீவ் காந்தி ஆட்சிபோன்று இவ்விடயத்தில் இந்திய அமைதிப்படை என்ற வகையிலான இராணுவ உதவிகள் பேரழிவையே தரும் இதில் விடுதலைப் புலிகளே நன்மை பெறமுடியும். விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க முடியாமல் இந்தியப்படை அவர்களை வெற்றிகொண்டல் கூட சிறிலங்கா அரசைவிட இந்தியாவிற்கே அதிகமான பிரச்சினைகள் இருக்கும்.

இந்தியாவுடன் சந்திரிகாவின் புதிய அரசு நல்லுறவு பேண விழைகிறது ஆனால் சிறிலங்கா அரசியலிலும், அரசிலும், பத்திரிகைத்துறையிலும் கொழும்பு - புதுடில்லி உறவை சீரழிக்கக்கூடிய செல்வாக்கு உள்ளவர்கள் இருக்கின்றனர். இவர்களை ஐ.தே.க ஊக்குவித்து வருகிறது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா கூட ஆட்சியில் இருந்தபோது சிறந்த அரசியல்வாதிபோல் அல்லாது சிங்கள இனவாதிகள் போன்றே பெரும்பாலும் நடந்துகொண்டார்

சந்திரிகா பதவி ஏற்ற பின்னர் கருத்துத் தெரிவித்த ஜெயவர்தனா இந்தியா தொடர்ந்து தனது கைகளை இங்கு வைக்காது இருக்க வேண்டும் என்றார் இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்பட்டது முதல் இந்தியா சிறப்பாக நல்லவிதமாகவே நடந்துவருகிறது துரதிஷ்டவசமாக இந்தியாவின் சில தூதுவர்கள் தாம் ஆளுநர்கள் போல் நடந்து இந்தியாவிற்கு கெட்ட பெயரை சம்பாதித்தனர் நல்லவேளையாக அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர் புதுடில்லி குறித்தது சந்திரிகா அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை புதுடில்லி தன் கையை சுட்டுக்கொண்டுவிட்டது எனினும் வடக்கில் நடைபெறும் ஆயுத மோதல்கள் தமிழ்நாட்டிலும் அப்பாலும் அநுதாபத்தை ஏற்படுத்தும் தீர்விற்கான சந்திரிகாவின் நடவடிக்கையை வரவேற்கலாம் எனவும் குல்தீப் நாயர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்

### 55 வயது

அரசாங்கத் திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்களின் சேவைக்காலம் ஐம்பத்தைந்து வயதுடன் முடிவடையும் என நிர்ணயிக்கப்பட்டிருப்பதனால் அவசர அவசரமாக இந்த விபரங்களை திரட்டி கொழும்பிற்கு அனுப்பி வைக்கும்படி புதிய அரசு பணித்துள்ளது.

சிற்றூழியர்களிலிருந்து உயர் அதிகாரிகள் வரை இந்தப் பட்டியலில் அடங்குவார்கள் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 55 வயதைத் தாண்டிய பலஊழியர்கள் பணிபுரிவது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த ஊழியர்கள் இளைப்பாற வசதியாகவே இந்த நடவடிக்கை என்றும் இதன் மூலம் புதிய பல ஊழியர்கள் நியமனமாகும் வாய்ப்பு ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமான விசேட வானொலிச் செய்தி வடமாகாண பிராந்திய தபாலக காரியாலயத்திற்கும் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (தி. 88)

### வடபகுதி

இதில் வடமாகாண அஞ்சல் நாயகம் திரு சேதுகாவலரும் கலந்து கொள்கிறார்.

வெளிநாட்டு, உள்நாட்டு தபால்கள் சீராக வடபகுதிக்கு எடுத்து வருவது பற்றியும் இராணுவ மற்றும் கடற்படையினரின் கெடுபிடி நிலையைத் தவிர்ப்பது பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (தி, 88)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலங்கை

விஞ்ஞானபீடம்

இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் 1992 / 93

மேற்படி பரீட்சைகள் 1994 நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும்.

இப்பரீட்சைகளிற்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பெற்று

### 6 செய்தியாளர்

(பிரான்ஸ்) செய்தியாளர் இருவரும் வந்தனர்.

இவர்கள் உடனடியாக யாழ் நகரம் அழைத்து வரப்பட்டனர். (யோ)

### 40 தபால்

வரப்பட்டுள்ளன.

யாழ் இலங்கை வங்கிக்கு

# தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவு நாட்களின், 3-ம் நாள் உண்ணாவிரத நிகழ்வுகள் யாழ். குடாநாடெங்கும் இன்று நடைபெறவுள்ளன.

வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில், சுன்னாகம்சிவன் கோவிலடியில், சுன்னாகம் ப.நோ. கூ. சங்கம், ஏழாலை கலைவாணி ச. ச. நிலையம், உதயகலா ச. ச. நிலையம் என்பனவும், சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கமும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை இடம்பெயர்ந்த மக்களும், கோப்பாய் வட்டத்தில் நீர்வேலி கந்தசுவாமி கோவில் முன்றலில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நாவலர் வித்தியாலயம், இருபாலை சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலை, கோப்பாய் கந்தவேல் வித்தியாலயம், நீர்வேலி ப. நோ. கூ. சங்கம், சர்வோதயம், கோப்பாய் மாதர் சங்கம், ச. ச. நிலையங்களும், யாழ். நல்லூர் வட்டத்தில், நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச வர்த்தகர்கள், வர்த்தக ஊழியர்கள், சங்க உறுப்பினர்கள், தனியார் கல்வி நிறுவனங்களும் கலந்து கொள்ளும்.

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில் புலோலி வணிகர் சங்கமும், கரவெட்டி வட்டத்தில் சயன்ஸ் சென்ரர், கரவெட்டி தெ. ப. பொ. கூ. சங்கமும். உடுப்பிட்டி வட்டத்தில், உடுப்பிட்டி வர்த்தகர் சங்கம் வீரகத்தி சனசமூக நிலையம், ஜீவகன் சனசமூக நிலையம், உதயசூரியன் ச. ச. நிலையம், உடுப்பிட்டி நகர் ச. ச. நி., இராசலிங்கம் ச. ச. நிலையம் என்பனவும் கலந்து கொள்ளும்.

தென்மராட்சிக் கோட்டத்தில், கைதடி வட்டத்தில்- கைதடி-நாவற்குழி பக்கி வீதி மக்களும் சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் சரசாலை மட்டுவில், மட்டுவில் நுணாவில் ப. நோ. கூ. சங்கம் தெ. ப. பொ, கூ. சங்க ஊழியர்களும் கொடிகாமம் வட்டத்தில் (190-ம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்), கலைமகள் ச. ச நிலையம், பாலாவி ச. ச. நிலையம். வடக்கு மிருசுவில் மாவீரர் ச. ச. நிலையம், வர்த்தகர் சங்கம் என்பனவும், பளைவட்டத்தில், இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில் இந்தாவில் செல்வபுரம் மக்கள். ப. நோ. கூ சங்கம் என்பனவும் கலந்து கொள்ளும்.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில் யா- ப. நோ, கூ. சங்கம், செம்மாதெரு ஸ்ரீபன் குடியிருப்பு. தீவகம்கடற்தொழிலாளர் ஒன்றியம் என்பன கலந்து கொள்ளும்.

கடற் புலிகளின் பிரதேசங்களில் குடத்தனையிலும், வத்தராயனிலும், உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறும்.

### வடக்கு-கிழக்கில்

றும் கூறினார்.

சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற்றால் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படுமா என இராணுவ சிப்பாய் ஒருவர் கேட்டபோது, நாட்டின் சகல பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, வடக்கு கிழக்குப் பகுதிகளில் தற்போதுள்ள முகாம்கள் எக்காரணம் கொண்டும் அகற்றப்படமாட்டாது என அமைச்சர் கூறினார்.

தொடர்ந்தும் யுத்தம் நடைபெறும் பகுதிகளிலேயே தாங்கள் கடமையாற்றிவருவதாக சில பொலிசார் சுட்டிக்காட்டிய போது. இதனை தவிர்ப்பது பற்றி பொலிஸ்மா அதிபருக்கு உடனடியாக பணிப்புரை வழங்குவதாக அமைச்சர் தெரிவித்தார்,

சமாதானப் பேச்சுக்கள் வெற்றியளித்தால், இராணுவத்திலுள்ள பெண்கள் தங்கள் தொழில் வாய்ப்பை இழக்க நேரிடுமா என பெண்

### இராணுவத்தின்

தொடை ஒன்றில் துப்பாக்கி ரவை பாய்ந்ததில் படுகாயமடைந்தவராவார். இச் சம்பவத்தின்போது 15பேர் மட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்ததாக தெரிய வருகின்றது.

இதை அடுத்து ஷெல்தாக்குதலை இராணுவத்தினர்மேற்கொண்டதில் இரண்டு வீடுகளும் சிறு சேதத்திற்குள்ளாகின- [சி, 88]

### யாழ்.

கொழும்பிலிருந்து வெகுவிரைவில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட உள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை வடபகுதிக்கு துரித கதியில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்

வாங்கிப் படிக்கத் தயாராகுங்கள்


# வள்ளுவம்

'ஊக்குக்கு நிதி, வாழ்வுக்கு வீரம்'

இது மாதமொரு இதழ் ஆகும்

இதழின் விலை 2 ரூபா 50 சதம் மட்டுமே

(சி-10358)



## வலி மேற்குப் பிரதேச வணிகர் கழகம்

சங்கானை

# முக்கிய அறிவித்தல்

மண்ணையும் மக்களையும் நேசித்து தன்னை உருக்கிய மாவீரன் தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாள் உண்ணா நோன்பு நாளை (18-09-1994) வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதால், அனைத்து அங்கத்தவர்களும் காலை 7.00 மணியிலிருந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

தலைவர்

வலி - மேற்குப் பிரதேச வணிகர் கழகம்.

(9433)



யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30,

மாலை 4.00, 6.00 மணி.

# தாயகக் கனவு

(சி/10349)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


இக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (தி, 88)

## பாவனைக்கு

இன்று வரை யாழ் மாவட்டத்தில் நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடத் தவறிய வர்த்தக வியாபாரிகள் சகலரும் யாழ். செயலகத்தில் பிரதி புதன்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை தராசுப்படிகளுக்கு முத்திரையிடலாம் என மேற்படி திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

வாய்ந்த விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பெற்று 15-10-94 க்கு முன்பாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களிற்கு முத்திரை ஒட்டிய 23cm × 10cm அளவுள்ள தபாலுறையினை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பரீட்சைக்கிளை என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர்

(சி-10356)

40 தபால் வரப்பட்டுள்ளன.

யாழ் இலங்கை வங்கிக்கு இக் கப்பலில் பணமும் வந்து சேர்ந்துள்ளது. மேலும் யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களது செப்டம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் வந்து சேர்ந்துள்ளன.

தபால் பொதிகள் திங்கட்கிழமை கப்பலில் இருந்து இறக்கப்பட்டு எடுத்துவரப்படுமென தெரிய வருகிறது இக் கப்பலில் மண்ணெண்ணெய் பரல்களும் வந்துள்ளன.

(யோ )

வத்திலுள்ள பெண்கள் தங்கள் தொழில் வாய்ப்பை இழக்க நேரிடுமா என பெண் படையினர் ஒருவர் கேட்டபோது, நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களது சேவை பெறப்படும் எனவும், அவர்களது ஜீவனோபாயம் சீர்குலைய மாட்டாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் காலத்தில் படையினர் தமது கடைமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். கடந்த காலங்களைப் போன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படமாட்டாது சகல விபரங்களும் மக்கள் முன் வைக்கப்படும் எனவும் அமைச்சர் அப்போது தெரிவித்தார் பேச்சுவார்த்தைகளை பல வருடங்களுக்கு நீடிக்கும் உத்தேசமும் தங்களுக்கில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஜனாதிபதித்

என்னும் அரசியல் பலம் புதிய அரசிடம் இருந்தும் அது வண்டி குறிப்பிட்ட தூரம் செல்லும் அளவிற்கே போதுமானது. தொடர்ந்து வண்டி குறிப்பிட்ட எல்லையை சென்றடைய வேண்டுமாயின் அதற்கு தேவையான எரிபொருள் என்னும் அரசியல் பலம் சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதி தேர்தல் மூலம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இதனால் ஜனாதிபதித் தேர்தலின் பின்பே சமாதான வண்டி குறிப்பிட்ட எல்லையை சென்றடைவதற்கு தேவையான சக்தியைக் கொண்டுள்ளதா? இல்லையா? என தீர்மானிக்க முடியும்.

இருந்தும் சமாதான வண்டியை சரியான இலக்கு நோக்கிச் சீராக ஓட்டும் வல்லமை புதிய பிரதமருக்கு உண்டு என பலராலும் நம்பப்படுகிறது எனவும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

(88), (நி)

வித்தன.

இதேவேளை வடபகுதிக்கு துரித கதியில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வவுனியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இது தொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் மின்சார இணைப்பு தொழில்நுட்ப அதிகாரிகள் அனுப்பப் பட்டிருப்பதாகவும் அத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## காணாமற்போன

இதில் லெப் கீர்த்தி விமலசேனா உட்பட 12 கடற்படையினர் காணாமற் போயினர். இவர்களின் பெற்றோர் பிரதமருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் இவர்கள் காணாமற் போயிருப்பதாக கடற்படைத் தளபதி தமக்கு அறிவித்து இருப்பதாகவும் அதன் பின் எந்தத் தகவலும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது பிள்ளைகள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கின்றனரா என்பதை அறியும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த மகஜரில் ஒரு பிரதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி

க்கமுடியும் என ஐ-தே-க-வட்டாரங்களில் கருதப்படுவதாக கூறப்படுகிறது.

விசாரணையின் போது பெருமளவிலான ஐ-தே-க-மூத்த உறுப்பினர்கள் விசாரணைக்குள்ளாகலாம் என்பதால் விசாரணைகளின் பின் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றால் அது கட்சிக்கு பலத்த பின்னடைவாகி விடும் என்ற அச்சத்திலேயே ஜனாதிபதி தேர்தலில் அவசரம் காட்டுவதற்கு காரணம் என கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி, 88)


# கற்பகச்சோலை

## பனம் பண்ணைத் திட்டத்தின் கீழ் வலிகாமம் பகுதியில் பனம் விதை நடுகை

மேற்படி திட்டத்திற்கு அமைய அராலி வீதி, கல்லுண்டாய் பிள்ளையார் கோவிலடி, கல்லுண்டாய் கலைமகள் சனசமூக நிலையம், கொத்துக்கட்டி மயான சுற்றாடல் பகுதிகளை அண்டிய தரவை நிலம் பனங்கூடல் பகுதிகளில் ஒரு இலட்சம் பனம் விதைகளை நடுவதற்கு வலிகாமம் பகுதி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், இதன் கொத்தணியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இவ் இடங்களில் பனம் விதை நடுவது தொடர்பாக எவருக்காவது ஆட்சேபனைகள் இருப்பின் 27-09-94-ம் திகதிக்கு முன்னதாகப் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

க. சந்திரராசா

திட்ட இணைப்பாளர் / பொது முகாமையாளர்

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

நடுவப்பணியகம், மானிப்பாய்

[சி10357]